தன்னிடமுள்ள எல்லாவற்றையும் தனது கணவன்,
பிள்ளைகளுக்காக மனமுவந்தளித்துக் குடும்பத்தை
போஷித்த அன்பே உருவான எமது குடும்பத் தலைவிக்கு
இது சமர்ப்பணம்



அமரர் திருமதி

# சிவமணிதேவி யோகசிங்கம்

ஞாபகார்த்த வெளியீடு

**06.06.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி.யோகசிங்கம் சிவமணிதேவி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

வளம்மிகு அச்சுவேலியில் திரு. திருமதி. சுந்தர் பொன்னி தம்பதியினரின் இரண்டாவது மகளாக 1945ம், ஆண்டு சித்திரை மாதம் இருபத்தேழாம் திகதி சிவமணிதேவி ஜனனம் பெற்றார். இவர் பிறந்து மூன்று மாதங்களிலேயே இவரது தாயின் தங்கை ஆகிய திருமதி சின்னட்டி சீதேவி அவர்களின் வளர்ப்பு மகளாக தத்தெடுத்து வளர்க்கப்பட்டு அச்சுவேலி சென் திரேசாள் கல்லூரியில் கல்வி பயின்றார். இவருக்கு பரிமளம், குணபாலசிங்கம் (பிரான்ஸ்), காலம்சென்ற தருமகுலசேகரம் ஆகியோர் சகோதரர்களாவார்.

தனது 15வது வயதில் 1960ம் ஆண்டு 11ம் மாதம் 19ம் திகதி மந்துவிலைப் பிறப்பிடமாக கொண்ட திரு.திருமதி சின்னப்பொடியன் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனாகிய திரு.யோகசிங்கம் என்பவரை தனது வாழ்க்கைத் துணையாக கரம்பிடித்தார். (காலம் சென்ற பற்குணம், வேலையா, இரத்தினசிங்கம், வீரசிங்கம், சிவபாதசுந்தரம், விஜயபாஸ்கரன் ஆகியோர் இவரது மைத்துனர்களாவர். யேகசிங்கம் சிவமணிதேவி தம்பதியினருக்கு) மூன்று ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். இவர்கள் தமது மூத்த மகளை ஆங்கிலத்துறையில் ஈடுபடச் செய்ததுடன் மூத்த மகனை நாட்டின் சூழ்நிலை காரணமாக தூரதேசத்திற்கும் அனுப்பநேரிட்டது. இரண்டாவது மகனை கணிதத்துறையில் ஈடுபடச் செய்ததுடன் இரண்டாவது மகளை சமூக அபிவிருத்திப் பணியில் ஈடுபடுத்தினர். வாழ்வின் ஒருபகுதியை தனது கணவருடன் குச்சவெளிப் பகுதியில் கழிக்க நேரிட்ட சந்தர்ப்பத்தில் உருவாகிய தமது இளைய மகனை அம் மாவட்டத்தில் பணிபுரியும் வைத்தியராக்க வேண்டுமென ஆசைப்பட்டு அதனை சாதித்தும் காட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்த வீட்டில் தனது கணவனின் தம்பிகளை உள்ளடக்கிய குடும்பத்தினதும் தனது பெற்றோரை இழந்தபின் தம்பிமார் இருவரையும் கொண்ட குடும்பத்தினதும் சுக துக்க நிகழ்வுகள் அனைத்தையும் முன்னின்று நடாத்தும் ஆளுமை மிக்கவராக இருந்தார். தனது அனைத்து பேரப்பிள்ளைகளின் வளர்ச்சியிலும் மிகவும் அக்கறை கொண்ட இவர் பேரப்பிள்ளைகளுக்காக தனது கணவர், உற்றார், உறவினர்களை பிரிந்தும் சந்தோஷமாக தனது வாழ்நாளில் 05 வருடங்களை மட்டக்களப்பில் தனது இரண்டாவது மகளுடன் கழித்தார்.

பிள்ளைகளின் வளர்ச்சியில் பெருமிதம் கண்ட இவருக்கு 2007ம் ஆண்டு 06ம் மாதம் 28ம் திகதி அகாலமரணம் அடைந்த இரண்டாவது மகனின் மரணச்செய்தி பேரிடியாக அமைந்ததுடன் அது அவரது மரணம் வரை அவரை துன்பத்தாலும் நோயாலும் பெரிதும் வாட்டியது.

"சிவம்" எனசெல்லமாக அனைவராலும் அழைக்கப்படும் இவர் அன்பே "சிவம்" என வாழ்ந்து காட்டி 07.05.2017ம் திகதி சிவபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நினைவலைகள்

இந்தியாவில் மூத்தமகனின் திருமணத்தின் போது...



இரண்டாவது மகனின் பேரனுடன் பேராதனையில்...



இளைய மகனின் பதிவுத் திருமணத்தில் மட்டக்களப்பில் ...



72வது பிறந்த தினத்தின் போது பேரப்பிள்ளைகளுடன்
27.04.2017 மட்டக்களப்பில்...



மூத்த பேத்தியின் 3வது பிறந்த தினத்தின் போது...



மூத்த பேரனின் பிறந்த தினத்தின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆருயிர் நாயகியே!

நீர் மூன்று விடயத்தையே வாழ்வில் எதிர்பார்த்தீர். ஒன்று நீர் கூப்பிடுகின்ற போது நான் அருகில் இருக்கவேண்டும் என்பது; மற்றையது நீர் இறக்கும் போது அது எனது மடியிலேயே நிகழ வேண்டும் என்பது; அடுத்தது நீர் என்னிடம் மட்டுமே பணம் கேட்க வேண்டுமென்பது. உமது வாழ்விலே கடைசி அத்தியாயத்தில் மூன்றையும் நிறைவேற்றமுடியாத பாவியாகி விட்டேன். நான் செய்த தவறு உம்மை தனியாக மட்டக்களப்பிற்கு அனுப்பி வைத்தது தான். அது கூட இடமாற்றம் உமது உடல் நிலை மாற்றத்தையும், உமது பேரப்பிள்ளைகளுடன் அளவளாவுவது உமக்கு அமைதியையும் தரும் என எண்ணிய படியால் தான். கடைசி நேரத்தில் நீங்கள் வந்து விட்டீர்களா? அப்பா சாப்பிட்டு விட்டாரா என நூறு தடவைகள் கேட்டதாக உமது இளைய மகள் என்னிடம் கூறியுள்ளார். இதை நினைக்கும் போது எனது நெஞ்சம் கொதிப்படைகிறது. எமது குடும்பம் நன்மையடைவதற்காக எத்தனையோ கஷ்டங்களையும் மன உளைச்சல்களையும் பட்ட நீர் கடைசி நேரத்தில் என்னருகே இல்லாமல் கஷ்டப்பட்டு பிரிய நேரிட்டது மிகப்பெரிய துரதிஷ்டம். 56 வருடங்கள் ஒரு சராசரித் தகப்பனாக நான் இருப்பதற்கும் சராசரிக் கணவன்ாகவும் இருப்பதற்கும் ஒரு ஆளுமையுள்ளவனாக மிளிர்வதற்கும் காரணம் நீர் மட்டும் என்று தான் நான் கூறுவேன். நான் அந்த நிலையை அடைவதற்கு நீர் எத்தனை தியாகங்களையும், விட்டுக் கொடுப்புக்களையும் செய்திருப்பீர். நோயின் தாக்கம் காரணமாக சில வேளைகளில் தடுமாறிய உம்மை நான் கடிந்து கொண்டாலும் அதனை உடனேயே மறந்து விடுவதை நினைக்கையில் நான் வேதனைப்படுகிறேன். இந்த நிலை எனது சாவு வரை தொடரப்போகிறது.

ஒரு சராசரிக் குடும்பத் தலைவனாக சராசரி தகப்பனாக நான் இருப்பதற்கு ஏறக்குறைய ஐம்பத்தாறு வருடங்களாக பல கஷ்டங்களுக்கும், மன உளைச்சல்களுக்கும் மத்தியில் நான் சந்தோசமாக வாழ்வதற்கும் சமூகத்தில் உரிய முறைப்படி அங்கீகரிக்கப்படுவதற்கும் அரிய பல ஒத்தாசைகளையும் தந்து எமது பிள்ளைகளிடத்தே அன்பையும் பொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தை போஷித்த பெருமை உம்முடையதாகும். பிள்ளைகளின், பேரப்பிள்ளைகளின், மருமக்களின் பெயரை ஒரு தடவையேனும் உச்சரிக்காத இன்சொல்லை மட்டும் உதிர்ந்து கொண்டிருந்த குடும்பத் தலைவி நீராவீர். யாருடனும் அன்புடனே பழகிய நீர் வாழ்வின் கடைசி அத்தியாயத்தை நோயின் துன்பத்தையே அனுபவிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டீர்.

குடும்பத்திற்காக பல தியாகங்களைச் செய்து ஓயாமல் உழைத்த நீர் என்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் நோக வைத்தது கிடையாது. உமக்கு தெரியாமலே பல பாரதூரமான தீர்மானங்களை எடுத்திருக்கிறேன். ஆனால் நீரும் உமது அன்னையும் (ஆச்சி) நடந்துகொண்ட பெருந்தன்மையை நினைக்கும் போது எனது உணர்வுகள் எப்படியிருக்கும்? சிக்கனமான செலவுகளுடன் எனக்குப் பிடித்தமான சுவையான உணவுகளை உம்மைத்தவிர யாரும் ஆக்கித் தந்ததில்லை. நீர் பாவிக்கின்ற அடிக்கடி உச்சரிக்கும் ஒரு சொல் "சாப்பிட்டீர்களா?" என்பது தான். நான் சாப்பிடும் அளவை அவதானித்து சாப்பாட்டின் தரத்தை நீர் கணித்துக் கொள்வீர். உமது இரண்டாவது மகனின் மறைவு உமக்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தி முடிவில் உம்மை ஒரு நிரந்தரமான நோயாளி ஆக்கிவிட்டது. ஆனால் எந்த நிலையிலும் உமது மனநிலை மாறவில்லை. உமது விஷேட குணம் நாதியற்றவர்கள் பக்கம் நிற்பதும் அவர்கள் செய்கின்ற தவறுகளை மறப்பதுமே. நான் உமக்குத் தந்த சஞ்சலங்களுக்கு உமது ஆத்மாவிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். எமது பிள்ளைகளில் ஒருவரை வைத்தியத்திற்கும், இன்னொருவரை கணிதத்திற்கும் இரண்டு பிள்ளைகளை ஆங்கிலத்திலும் கல்வி பயிலவும் ஒரு மகனை கால சூழ்நிலைக்கேற்ப வெளிநாடு அனுப்பியும் வைத்திருக்கிறோம். அது நிச்சயமாக உமது அன்புடன் கூடிய வழிகாட்டலாலேயே அமையப்பெற்றது. எனது மனக்கிடக்கையினை மட்டுமே இங்கே கூறமுடிந்தது. இதுவாவது எனக்கு சாந்தியை ஏற்படுத்தும் என நான் எண்ணுகின்றேன்.


**அன்புள்ள கணவர்.**
**சி.யோகசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நினைவலைகள்

## 56வது திருமண நாளின் போது...





கணவனின்
75வது பிறந்த தினத்தின் போது...



கணவனின்
75வது பிறந்த தினத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் திருவுருவம் அம்மம்மா

அன்பின் இலக்கணமாய் அகிலம் போற்ற வாழ்ந்து
ஆறாத் துயரத்தை நம் அடிமனதில் தந்து
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழாத போதும்
அன்பையும் பண்பையும் உம் அரவணைப்பில் உணர்ந்தோம்
தாயினைப்போல் அன்பைத்தந்து
தந்தையைப்போல் அறிவைத் தந்தீர்....
தலைகோதி அணைத்தெடுக்கும் - உம்
திருக்கரங்கள் அடங்கியதே...?

பிறர் பிள்ளையை உம் பிள்ளைபோல் எண்ணி
பிரிவினை காட்டாது பாசமதை ஊட்டுவீரே....
அம்மன் போன்று அழகிய திருமுகம்
அன்பைக்காட்டும் அழகுதான் உம் மனம்
பிள்ளைகளை தரணியில் நல்வழிப்படுத்தி
பேரப்பிள்ளைகளை பேணிக்காத்து வாழ்ந்தீரே
தினம் நான் உம் முகம் காண வந்திடும் வேளை
தித்திப்புடன் எனை அழைத்து தெவிட்டாத கதை பேசுவீரே

இத்தனை அன்பையும் பரிசளித்து - இப்போ
எத்தனை ஜென்மமும் காணாத எட்டாத்தூரம் சென்றுவிட்டீர்.
சிரிப்பிலே அழகியாய் எம்மை கவர்ந்துவிட்டீர்
சிவமணி தேவியாய் நெஞ்சில் வாழ்ந்துவிட்டீர்
எரிகின்ற தீகூட அணைந்துவிடும் - ஆனால் உம் நினைவு
ஆறாத வலிகளாய் நெஞ்சில் வாழ்ந்துவிடும்
உத்தமியாய், உண்மையுள்ள மனைவியாய் - வாழ்ந்து
உதிரத்தில் பிள்ளைகளை உறவுகொண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கும் கண்கள் கண்ணீர் சுமந்திடும் வேளை
உறங்கா நெஞ்சங்கள் இங்கு உம்மை சுமக்கின்றன
கணவன், பிள்ளைகள் என்று உருகிய நெஞ்சம் இன்று
கண்காணா தூரம் எமை விட்டு சென்றதேனோ?
ஏழேழு பிறவியிலும் வேண்டுகிறோம் - உம்மை
எந்நாளும் மறந்திடாத பாசமுள்ள உறவுகளாய்
இறுதிநாள் காண என் மனம் ஏகவில்லை -- ஆனாலும்
பிறவிகள் பல வேண்டுகிறேன் உம் பேர்த்தியாய் பிறந்திட

நெஞ்சகலா நினைவுகளுடன்

பேர்த்தி சோபிதா.

## அன்பென்ற சொல்லின் அகராதி என் அம்மம்மா

பதினாறு ஆண்டுகளாய் என்னுடன் இருந்து பக்குவமாய் எனை வளர்த்து பாரினிலே உயர்த்தினீரே. எத்தனை ஜென்மம் தான் எடுத்தாலும் ஆறிடுமோ உம்பிரிவு. அன்பாய் எம்முடன் இருந்தீர் 'அபியா" என எனை அழைத்தீர். காலனவன் கைப்பறிக்க கணப்பொழுதில் பிரிந்தீரே!

அம்மம்மா! என் தாயின் மார்பில் நான் தவழ்ந்ததை விட உங்கள் மடியில் தவன்ற கணங்களே என் நினைவில் அதிகம். உமது கடைசிநேர வாழ்வுப் போராட்டத்திலும் அபியா.... அபியா.... என எனை அழைக்கும் உம் குரல் அடங்கியதோ அம்மம்மா. பாசத்தால் எனை என்றும் கட்டிவைத்தீர். ஒரு கணம் கூட கோபமாய் சீறியதில்லை என்னிடம். என் தந்தையைக் கூட உம் தனையனாய் எண்ணி பாசக்குரலால் தம்பி... தம்பி.... என அழைத்திடும் வரம் நீர் எமக்கு... என் நண்பர்களையும் என்னைப்போலவே நினைத்து அரவணைக்கும் உங்கள் வாயிலிருந்து "சாப்பிட்டியாம்மா" என்ற வார்த்தையை இனி நாம் கேட்க முடியாதே!

மென்மைக்கடையாளமாய் மேன்மையாய் புவியில் வாழ்ந்த உமது குரலை இனி கேட்கத்தான் இயலுமா?

அன்புடன் பேர்த்தி ஆரபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அம்மம்மா!

எமது அம்மம்மா மிகவும் நல்லவர். எங்கள் மீது மிகவும் அன்பு கொண்டவர் அம்மம்மாவிற்கு அன்பிற்கு மேலாக எதுவும் இல்லை. எங்களுக்காக அவர் எல்லாரையும் விட்டுட்டு வந்து மட்டக்களப்பில் இருந்து எங்களை வளர்த்தார். தவணைப் பரீட்சை வந்தால் எங்களுக்கு சரியான சந்தோஷம் ஏனென்றால் அது முடிய லீவு; யாழ்ப்பாணம்;அம்மம்மாவுடன் ஜாலியாக இருக்கலாம். நாங்கள் வாகனத்தை விட்டு இறங்கும் போது எங்களுக்காக கதிரையில் இருந்து பார்த்துக் கொண்டேயிருப்பார். விடுமுறை முடிந்து நாங்கள் வெளிக்கிடும் போது திருப்பித் திருப்பி எங்களை கொஞ்சிவிட்டு "அடுத்த லீவிற்கு வாருங்கோ, அதுவரை நல்லா படியுங்கோ" என்பார். எங்கட அம்மாவை எங்களை பேசவோ, அடிக்கவோ விடமாட்டார்.

அடுத்த லீவு வரும். நாங்கள் யாழ்ப்பாணம் வரலாம். ஆனால் எங்கட அம்மம்மா?.......

என்றும் மறவாத பேரப்பிள்ளைகள்

ராசா சாகித்தியன்,

லக்சுமி அபர்ணா,

சாம்புக்குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கோர் அண்ணி

அண்ணி! நீங்கள் மறைந்து 31 நாட்கள் ஆகிவிட்டன. ஆனாலும் நீங்கள் எங்கள் வீட்டில் காலடி வைத்து 57 ஆண்டுகள் ஆகிவிட்டன. இக்காலத்தில் ஏற்பட்ட நினைவுகள் நிலைவலைகளாக கவலையை ஏற்படுத்தி வருகின்றன. உங்கள் இறப்பை பற்றியதல்ல, உங்கள் நினைவு பற்றியே எல்லோரும் கவலையடைந்துள்ளார்கள். உங்கள் மறைவு இயல்பான காலத்தில் தான் என்றாலும் நீங்கள் பட்ட வேதனை சகிக்க முடியாதிருந்தது. உங்கள் அருமை மகன் ரமேஷின் அகாலமரணம் உங்கள் உடலையும், மனதையும் உருக்கி இறுதியில் உயிருக்கும் உலைவைத்துவிட்டது. அண்ணை இப்போது தனிமரமாக நிற்கின்றார். விழுதுகள் இருக்கின்றன. ஆனால் வேர் அறுந்தால் தாங்க முடியுமா?

அண்ணி! நீங்கள் எங்கள் வீட்டிற்கு மருமகளாக வந்தபோது உங்களுக்கு 15 வயது. அண்ணைக்கு 21 வயது. இப்போது இவைகள் ஆச்சரியமான விடயம். மிகச்சிறிய வயது, தூர தேசம், தாங்கள் தூரத்து உறவினர் கூட இல்லை, எல்லை தாண்டாமல் உள்ளுக்குள்ளேயே சம்பந்தம் கலந்த காலகட்டம் அது. போதாக்குறைக்கு எங்கள் மந்துவில் ஊர் பற்றி விஷமத்தனமான தகவல்களையும் கேட்டிருப்பீர்கள். மந்துவிலில் பொதுவாக ஆண்கள் தான் அதிகம். இப்போதும் அப்படித்தான். குடும்பத்திற்கு ஒன்றிரண்டு பெண்கள் தான் இருப்பார்கள். எங்கள் வீட்டிலும் நாங்கள் ஆறுபேர் ஆண்கள். அம்மா தான் ஒரு பெண் துணை. இவை எல்லாம் உங்கள் தந்தை சுந்தர் மாமாவிற்கும் சுந்தர் மாமாவை இடைமறித்து உங்களைத்தந்த பள்ளி மாமாவுக்கும் புரியாததல்ல. உங்கள் உறவினர் சிலர் இவைகள் பற்றி எச்சரித்ததாயும் கேள்விப்பட்டோம். ஆனால் இவையெல்லாம் உங்களை பயமுறுத்தவில்லை.

மாறாக மந்துவில் மண்ணை மதித்தீர்கள். மண் வீடுகளை மறுக்கவில்லை. ஓலைக் குடிசைகள், பனை ஓலை வேலிகள், பனஞ்சோலைகள், நாவல் மரங்கள், வேரக்காடு, குளங்கள், திறந்த வெளிக்கிணறுகள் எல்லாம் நல்ல காட்சிகளாகவே உங்களுக்கு தென்பட்டன. பனையோலை தலையணையை மாற்றி சீலைத்தலையணை செய்தது நீங்கள் தான். ஏற்றுக்கொள்ள முடியாத வசதியீனங்களை பழகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டீர்கள். எங்கள் நடை, உடை பாவனைகளும் மாறின. இவை மற்றக்குடும்பங்களிலும் ஏற்பட்டன. எங்கள் அம்மாவும், ஐயாவும் உங்களிடம் காட்டிய அன்பும் மரியாதையும் மற்ற உறவினர்களிடம் காட்டிய அன்பும் நெகிழ்வுப் போக்கும் உங்களுக்குச் சாதகமாயிருந்தன. அக்காலத்தில் வெளியூர்ச் சம்மந்தங்கள் ஒன்றிரண்டு இருந்தன. ஆனால் உங்கள் வரவுதான் சிறப்பையும் பிரபல்யத்தையம் தந்தது. முக்கிய காரணம் உங்கள் அன்பான நடத்தைகளும் சம்பாஷணைகளும் தான்.

எப்படியிருந்த போதிலும் பொருத்தமில்லாத சங்கதிகள், பிற செய்திகள் எவையும் உங்கள் பிறந்த இடத்திற்குப் போகவில்லை. இந்த இடத்தில் மகாகவி பாரதியின் பாடல் வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. "கேள்வி மிகக் கேட்பார், கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார். உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம்பலத் துரைப்பார். எள் வீட்டில் இல்லையென்றால் எ்ங்கும் முரசறைவார்."

வேலைக்காரர்கள் பற்றித்தான் பாரதி சொன்னாலும் எல்லோர்க்கும் இது பொதுவானது. பல வீடுகளில் மருமகளாலோ, மருமகனாலோ அல்லது பிள்ளைகளாலோ அல்லது உறவினர்களாலேயோ தேவையற்ற வேண்டாத செய்திகள் திரிபுபடுத்தப்பட்டு வெளியே வந்துவிடும். இதனால் இரண்டு பகுதிக்குமே அவமானங்கள் ஏற்படுகின்றன. நீங்கள் இந்த பாட்டிற்கு விதி விலக்காக இருந்தீர்கள். ஆக்கபூர்வமாக செய்திகளைப் பரிமாற்றி நன்மையளித்தீர்கள்.

அம்மாக்கும் ஐயாவுக்கும் எங்களுக்கும் மிகவும் ஆறுதல், திருப்தி, நிம்மதி அளித்த விடயம் நீங்கள் அண்ணையுடன் கொண்ட அமைதியான வாழ்க்கை. அண்ணை மிகவும் கஷ்டமான பொருளாதார நெருக்கடியில் பட்ட மன உளைச்சல் கவலைகள் அதிகம். எந்த நேரமாயினும் அவர் வரும்போது அன்போடு வரவேற்று உபசரித்து நிம்மதி அளித்தீர்கள். அவர்தன் பிள்ளைகளுடனும் அயலவர்களுடனும் அழுத்தமின்றி பழக சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுத்தீர்கள். பல சந்தர்ப்பங்களில் ஐயாவும் அம்மாவும் இதை முன்னுதாரணமாக கதைத்து சந்தோஷப்படுவார்கள். இதில் உங்களை வளர்த்த (அன்னை) ஆச்சிக்கும் பெரும்பங்கு உண்டு என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். எப்போதும் அண்ணைக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேறென நீங்கள் இருந்தீர்கள். அண்ணன் வீழ்ந்துவிடாதிருந்தார்"

மகாகவி பாரதியின் புரட்டிப்போட்ட இந்த வரிகள் உங்கள் போன்றவர்களுக்காகத்தான் பொருந்தும்.

எங்கள் குடும்பத்தில் இன்பதுன்பங்களில் உங்கள் பங்களிப்பு அதிசயமாகவும் பிரயோசனமுள்ளதாகவும் எப்போதும் இருந்தது. சின்னணண்ணைக்கும், அண்ணைக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை, பார்வை தொடர்புகள் கூட இல்லாத சந்தர்ப்பங்களும் உண்டாயின. இதனால் எங்கள் குடும்பத்தில் சில அசௌகரியங்களும் எற்பட்டன. ஆனாலும் அண்ணி! நீங்கள் சின்னணண்ணையிடமோ அண்ணையிடமோ கோபித்துக் கொண்டதில்லை. நீங்கள் சின்னணண்ணை, சின்னணண்ணி அண்ணையிடமும் பரஸ்பரம் கலந்து உரையாடி முரண்பாட்டில் நெகிழ்வை உண்டாக்கினீர்கள். நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடி சந்தோஷமாக உரையாடி மகிழ நீங்கள் பெருந்துணையாக இருந்தீர்கள். இதுபோன்ற விடயங்கள் வேறு குடும்பங்களில் காண்பது அரிது. இது எங்களுக்கு ஒரு பெருமைக்கும் சந்தோஷத்துக்கும் உரிய விடயம்.

அண்ணி! உங்கள் குடும்பத்தில் இருந்த அமைதி தான் நான் உங்கள் வீட்டில் வந்து தங்கி சந்தோஷமாக பொழுதுபோக்க காரணமாக இருந்தது. உங்கள் பிள்ளைகள் எல்லோரும் என் மடியில் வளர்ந்தவர்கள். என்னை இன் முகத்துடனும், அன்புடனும் நடத்துகின்றார்கள். நீங்கள் என்மீது வைத்த அன்பு தான் இதற்கு காரணம். பல சந்தர்ப்பங்களில் உங்கள் ஆலோசனைகள் பழக்கவழக்கங்கள் எங்களுக்கு முன்மாதிரியாக இருந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

நான் இறுதியாக உங்கள் உயிர்பிரிந்த உடலை மட்டக்களப்பில் இருந்து வானில் தனியாக கொண்டுவந்தேன். அது சிலமணி நேரம்தான். ஆனால் உங்கள் அன்பு குடும்பத்தோடு பங்குகொண்ட சம்பவங்கள் உங்கள் முன்மாதிரியான பண்புகள் என்றும் நிலையாக இருக்கும்.

-போய் வாருங்கள் -

**அன்புடன் தம்பி**

**லிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசப் பெரிதும் இனியாய் நீ ! ...........

### அமரர் சிவமணிதேவி யோகசிங்கம் அவர்கள் பற்றிய ஒரு பார்வை

அமரராகிவிட்ட அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திருமதி சிவமணிதேவி யோகசிங்கம் அவர்களின் மறைவினை எண்ணிப் பார்க்கையில் என் மனதில் எழுந்தசோகம் அக்குடும்பம் சார்ந்த பல்வேறு விடயங்களையும் அசைபோட வைத்தன என்றால் அது மிகையானதாகவோ, உண்மைத் தன்மைகளற்றவையாகவோ இருக்க முடியாது. ஏனெனில் திரு.சி.யோகசிங்கம் அவர்கள் என்னோடு இரு வருடங்கள் 1964/65 காலப்பகுதியில் ஒரு சாலை ஆசிரிய மாணவர்களாக வாழ்ந்தோம். அதனை விடமானிடவியல் நின்றுமனம் விட்டுப் பழகினோம் என்பது தான் உண்மையாகும்.

திரு.யோகசிங்கம் அவர்கள் தென்மராட்சியிலுள்ள மந்துவில் கிராமத்தில் சின்னப்பொடியன் அவர்களின் குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்தவர். உலகம் சுட்டிப் பெயர் சொல்லக் கூடிய புகழ் பெற்ற அமரராகிவிட்ட பற்குணம், இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரத்தினசிங்கம் என வகை மாதிரிக்குக் குறிப்பிட்டு அவரது குடும்பத்தை அடையாளப்படுத்தலாம். இத்தனைக்கும் அந்தக் குடும்பமோ ஏழ்மையும் வறுமையும் சுற்றி நிற்க கல்வி கேள்விகளில் கொடிகட்டிப் பறந்தவர்கள் என்பது சாதனையாகும்.

இந்த நிலையில் ஆசிரியராகிவிட்ட திரு.சியோகசிங்கம் அவர்கள் அச்சுவேலி வடக்கு "சீதேவி" சேர்ந்த சிவமணிதேவி அவர்களைத் துணையாக்கிக் கொண்டு ஐந்து புத்திரபாக்கியங்களைப் பெற்றுமிகவும் ஏழ்மையானநிலையிலும்,உயர்கல்விவரைவளர்த்தெடுத்து மூத்த மகனை புலம்பெயர் நாட்டுக்கு அனுப்பி வைத்ததுடன் ஏனையவர்களை கணிதத் துறைசார்ந்த விற்பன்னராக்கியும், மருத்துவத்துறையில் டாக்டராகவும், பட்டதாரிகளாக்கி தகைசார்ந்த ஆசிரியர்கள், முதன்மையாசிரியர் என தமது குடும்பத்தை வளமாக்கி வளர்த்தெடுத்தமை அவர்களுடைய வெற்றியாகும். இந்த வெற்றிக்கூடாகப் பிள்ளைகளின் பரந்துபட்ட வாழ்க்கையில் இன்னும் பல சாதனைக்குரியவர்களாக விளங்கினர் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெருமைக்குரிய நிலையில் அமரர் சிவமணிதேவி அவர்களின் பணிகள் காத்திரமாக விளங்கின என்பதில் எந்தப் பிசகுமில்லை. ஒருவனுடைய வாழ்வின் வெற்றியில் எப்பொழுதும் ஒரு பெண் பின்னணியில் இருப்பாள் என்ற மரபு சார்ந்த பேச்சு வழக்குக்கு உதாரணமாக இந்தக் குடும்பத்திலும் அமரர் சிவமணிதேவி விளங்கினார் என்பது உண்மையாகும். ஆசிரியர் கலாசாலையில் அண்ணன் யோகசிங்கம் அவர்களுக்கு நாம் பன்னிருவர் தம்பியர்களாக விளங்கினோம். எனவேதான் அவருடைய வாழ்விலும் போக்கிலும் எமக்கு அவர் குடும்பம் பற்றிய பார்வையில் தொடர்பும் அக்கறையும் இருந்தது. அதனால் அவர்களின் குடும்பம் பற்றிய பார்வை எமக்கேற்பட்டது.

அமரர் சிவமணிதேவிஅவர்கள் வள்ளுவம் கூறும்

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டாள்-

வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"

என்ற குறளுக்கு அமைவாக வாழ்ந்து இல்லறத்தில் இனிதே விளங்கியவர். இவ்வாறெல்லாம் சிறந்த ஓர் இல்லறத்தின் துணைவியின் பிரிவு ஒர சாதாரணமான சோகத்துக்குரியதல்ல. எனவே தான் அமரத்துவமடைந்த சிவமணிதேவி அவர்களுடைய பிரிவு அவர்களுடைய ஒட்டு மொத்தமான குடும்பத்தினர்க்கு மட்டுமன்றி அவரை அறிந்த நண்பர்கள், அன்பர்கள், உறவுகள் அனைவருக்கும் சோகத்துக்குரியதாகும். இந்தச் சோகத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்கும் ஆறுதல் பெறுவதற்கும் அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி !    ஓம் சாந்தி !!    ஓம் சாந்தி !!!

**அல்வாய் செ.சதானந்தன் J.P**

**(ஓய்வுநிலைஅதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி.சிவமணிதேவியோகசிங்கம் அவர்கள்

## "இல்லிற்கிசைத் தொழுகும் உச்சத்தில் ஒருவர்"

யாழச்சுவேலி தன்னில் யாவரும் போற்றும் வண்ணம்
வாழச் சிவமணிதேவி வாய்த்தார் கணவன் யோகசிங்கம்
குச்சு வீட்டில் வாழ்ந்தாலும் குதூகலமாய்க் கூடியங்கு
மெச்சும்படி ஆக்கிவாழ்ந்தார் மெருகூட்டும் திறத்தினாலே
புகுந்த ஊர் மந்துவிலும் புதிய வளைப் புகழ்ந்து பேசும்
தகுந்தவராய் அங்கிருந்தும் தன் குடும்பம் தளைக்க வைத்தார்
பாகம் தான் அவர்க்கு எனப் பாவித்தவர் மனதில் நிறைந்து
யோகம் இவள் எனக்கு என யோகசிங்கம் சொல்ல வாழ்ந்தார்
சிரித்த இன் முகத்தினோடு சிறப்பாய் விருந்தின் வரவைஏற்று
விரித்த நல்ல இருக்கையிலே விருப்புடனே அமரவைப்பார்
எங்கிருந்த போதும் அங்கு எவர் வந்து சேர்ந்த போதும்
பங்கு தனது உணவு எனினும் பரிமாறி மகிழவைப்பார்
இவர்கள் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்லைக் கேட்டு
இவர்கள் மக்கள் இலங்கும் நிலையை இருந்திருந்து கண்டும் கேட்டும்
ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தம்மக்களை மற்றோரால்
சான்றோர் எனக் கேட்ட தாயின் நிலை தனை அடைந்தார்
ஓர் இரு நாட்கள் தங்கி ஒருமித் தெம்மில் இருந்த அந்த
நேர் நிறை பண்பு தன்னை நேற்றுப் போல் நினைவிற் கண்டோம்
பேர் உளத்தைக் கொண்டதாலே பேரன்பாற் குடும்பத்தோரின்
சீர் சிறப்பு நலங்கள் எல்லாம் சீரரா எனக்கேட்டு நிற்பார்

அதிபர் யோகசிங்கம் தன்னைஅடுத்த நோய்த் தாக்கம் பார்க்க
கதி உருளி மீது சென்று கண்டோம் அந்தக் கவலைக் காட்சி
வதியும் இல்லம் ஒன்றே எனினும் வசதிக்காயவர் வெவ்வேறிடத்தில்
பதிந்தகட்டிற் படுக்கை மீது பதியும் சதியும் படுக்கையிலே தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நோய்கள் தாக்கத்திலுமே அருகிருந்து நான் கதைத்த போது
வந்த எனது மகனைக் கண்டு வலிந்து உரத்துக் குரலைக் கொடுத்து
இந்தமகற்கோர் தகுந்த மணப்பெண் இருக்குமிடத்தை சொல்லுங்கோ என
நொந்த நிலையிற் கணவன் தனையே நொடியிற் கேட்ட தாயின் உள்ளம்
தம்பி என எனை அழைத்தென் தாரத்தையும் அழைத்தழைத்து
நம்பிடுவோம் என்றுமே நாம் நல்லவையே நடக்கும் நடக்கும்
தெம்பினொடு வார்த்தைகளைத் தெளிவாக உரைத்துரைத்து
கம்பியில்லாப் பேசியிலே கதைத்ததென்றும் கேட்கும் கேட்கும்

தலைவியைத் தாங்கி நின்று
        தான் உதவ முடியாநிலை
நிலை,நடை நடுங்கும் பதியை
        நின்று அசைக்க இயலாச்சிலை
சிலைஎனினும் இருவர் துடிப்பும்
        சிகரம் அதற்கு இல்லையேவிலை
விலை இல்லாஉயர்ந்த உறவை
        விளக்கி நிற்கும் இதுவேதலை

துணைவர்மக்கள் மருமக்கள் துள்ளும்பேரர் துடிப்பவர்கள்
இணையில்லா மனமுடையாள் இவர்கள் நெஞ்சில் - மணியோசை
சிவனுமையாள் கோவில்களாற் சிறப்பாக இருத்திடுமே
சிவமணி தேவி தனையே

கலாபூசணம் திரு.வ.கந்தசாமி,
(இ.அ.சே.வகுப்பு-1) ஓய்வுநிலை, அதிபர்,
"பெரியதாய் அகம்", இடைக்குறிச்சி,
வரணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE ELEGY READ BY ENGLISH TEACHERS AND EDUCATORS CIRCLE (E-TECH), NORTHERN PROVINCE ON THE FUNERAL OF

# MRS.SIVAMANIDEVI YOGASINGAM

(BELOVED MOTHER OF RATHA ALIAS MRS.SUNETHRA SELVARATNAM, ISA ENGLISH)

Our beloved Mother Beloved Sivamanidevi Yogasingham,
Our thoughts and prayers are with you.
And you are always in our hearts.
Ratha, Our hearts too go out with you in your time of sorrow.
We all know that your mother's greatest joy was making others happy.
This planet will not be the same without her.
Thinking of you, Ratha, at this time of loss,
Words fall short of expressing our sorrow for your loss.
No words can describe how sorry we are for your loss.

## Our beloved Mother Beloved Sivamanidevi Yogasingam,

May the love of those around you help you through the days ahead.
May the love of those around you help you in the coming days.
May your strength prevail to help you through this difficult time.
We are sharing in your sorrow with love, friendship, and support.
Our heartfelt condolences go out to you and your family.
Our deepest sympathies are with you in your time of need.
We wish we could be there with you sharing in your sorrow.
We can't imagine the sadness you must be feeling from your loss.
With deep sympathy and understanding at this time of sadness.
We all have a journey and leaving life behind is an honor.
At a time such as this, words cannot express our feelings.
May your heart find peace through the healing power of love.
Words seem inadequate to express the sadness we feel.

**ENGLISH TEACHERS AND EDUCATORS CIRCLE (E-TECH)**
**NORTHERN PROVINCE**
**07.05.2017.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ் கல்வி வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர்

திருமதி. சுனித்திரா செல்வரட்ணம் அவர்களின் பாசமிகு தாயார்

# அமரர் சிவமணிதேவி யோகசிங்கம்

பிறப்பு
27
.
04
.
1945



இறப்பு
07
.
05
.
2017

" குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்தவரே!

குறையின்றி நிறை வாழ்வு தந்தவரே!

பத்து மாதம் சுமந்து பெற்ற அன்புமகள்

சுனித்திராவின் பாசமிகு அன்னையாய்

பார்புகழ வாழ்ந்தவரே"!

காலமெல்லாம் கண்கலங்க வைத்து விட்டு

காலனுடன் சென்று விட்டாய்

நிலையில்லா வாழ்வில் நிலையான

சுகம் தேடி சென்ற தெய்வமே!

தில்லைக் கூத்தன் திருவடியில்

நின் ஆத்மா சாந்தி பெற வாழ்த்துகின்றோம்

நாம் எல்லாம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

நலன்புரிக் கழகம்
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்
08.05.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
27
.
04
.
1945



மறைவு
07
.
05
.
2017

எமது பாடசாலை முன்னாள் ஆசிரியரும் ஓய்வு நிலை அதிபருமான திரு.சி.யோகசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்,

எமது பாடசாலையில் முன்னாள் ஆசிரியையும், ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.சுனேத்திரா செல்வரத்தினத்தின் அன்புத் தாயாருமாகிய

## அமரர் சிவமணிதேவி யோகசிங்கம்

மாண்டவர்கள் எல்லோரும் மண்ணாவதில்லை

மாறாக... மறைந்தும் மறையாத சூரியனாய் எம் மனதில் என்றும் நீங்கள்....!

நின் ஆன்மா அமைதி பெறுக

**அச்சுவேலி மத்திய கல்லூரிச் சமூகமும்,**
**அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை சமூகமும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Constructions worth remembering

01. சட்டம் ஒருவருடைய சமூக அந்தஸ்தை கணக்கெடுப்பதில்லை.
**Law is no respector of persons**

02. தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்.
**Justice delayed justice denied.**

03. அவசரத்தில் வழங்கப்படும் நீதி தவறுதலாக வழங்கப்படும் நீதியாகும்
**Justice hurried justice miscarried.**

04. நீதி வழங்கப்படும் போது ஏற்படும் சந்தேகம் எதிரிக்கு அனுகூலமாகவே இருக்க வேண்டும்.
**In the dispensation of Justice, the benefit of a doubt should go to the accused.**

05. ஒரு தனிப்பட்ட நிகழ்வை அடிப்படையாக வைத்து பொதுவான அபிப்பிராயத்தை தெரிவிக்க முடியாது.
**One swallow does not make a summer.**

06. தனது பிள்ளைகளின் தவறுகளை கண்டும் காணாதது போல் இருக்கும் தகப்பன் அவர்களுடைய படுமோசமான எதிரியாவான்
**A father who connives at the faults of his children is their worst enemy.**

07. ஒரு பிழையைச் சரி செய்யும் போது சிலவேளைகளில் நாம் சரியைப் பிழையாக்கி விடுகிறோம்.
**In righting wrong we some times wrong the right**

08. நாம் எந்தளவு வாசிக்கிறோமோ அந்தளவுக்கு அறிவாளி ஆகிறோம்.
**The more we read the more we become knowledgeable.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பெண் என்பவள் ஆணை பூரணப்படுத்துபவளாவார் அவ்வாறே ஆணும் பெண்ணைப் பூரணப்படுத்துகிறான்.

**Woman is the complement of man and vice-versa.**

(மகாத்மா காந்தி)

10. கல்வியென்பது ஒருவனை வளர்ச்சிப் பாதையில் நகர்த்திச் செல்லும்

**Education promotes social mobillity**

11. இந்து சமயத்தில் சாதிபேதம் இருப்பதைவிட இந்து சமயமே அழிந்து போவதை நான் விரும்புகிறேன்.

**I would rather have Hinduism killed than have untouchability in our midst.**

(மகாத்மா காந்தி)

12. சகிப்புத் தன்மை என்பது பலயீனத்தின் அடையாளம் அல்ல மாறாக பலத்தின் அடையாளமாகும்.

**Tolerance is not a sign weakness but of strength.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவியின் மரணச்செய்தி கேட்டு அந்த அகால வேளையிலும் உடன் வந்து அச்சுவேலியிலும் மட்டக்களப்பிலும் உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் ஏனைய வழிகள் மூலமும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் கல்வித் திணைக்கள மற்றும் மருத்துவத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மரணச்சடங்கில் பங்கு பற்றிய அனைவருக்கும் 31ம், நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போஷனத்திலும் கலந்து கொண்டவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

"சீதேவி"
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு



அன்பு
என்ற தலைப்பில்
மிகச்சிறிய
கவிதை கேட்டார்கள்
அம்மா
என்றேன் உடனே!
கேட்டது
அம்மாவாக இருந்தால்
இன்னும் சிறியதாக
சொல்வேன்
நீ.... என்று

ஸ்ரீ கணேசன் அச்சகம், அச்சுவேலி 077 7392935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org